செ.வெ.எண்: 35 நாள்:11.08.2016

# பத்திரிகைச் செய்தி

சுதந்திர தினமான 15.08.2016-ஆம் தேதியன்று காலை 11.00 மணிக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள 497 கிராம ஊராட்சிகளிலும் கிராம சபைக்கூட்டம் நடைபெற உள்ளது. மேற்காணும் கூட்டத்தில் கிராமங்களில் வறுமைக்கோட்டிற்குகீழ் வாழும் மக்களின் மேம்பாட்டுக்கான திட்டங்கள் மற்றும் ஊராட்சிகளில் அடிப்படை தேவைகள் குறித்து கீழ்காணும் முக்கிய பொருட்கள் பற்றி விவாதிக்கப்படவுள்ளது.

**பொருள்-1 :** ஜனவரி 2016 முதல் ஜுலை 2016 முடிய கிராம ஊராட்சி நிர்வாகம் மற்றும் பொதுநிதி செலவினம் குறித்து விவாதித்தல், **பொருள்-2:** கிராம ஊராட்சி வளர்ச்சி திட்ட அறிக்கை, **பொருள்-3:**சுகாதாரம், **பொருள்-4:** மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டம், **பொருள்-5:** பிரதம மந்திரி குடியிருப்புத் திட்டம் (ஊரகம்) 2016-17, **பொருள்- 6:** ஊராட்சிப் பகுதிகளில் நடைபெற்று வரும் பல்வேறு திட்டப் பணிகள் முன்னேற்றம் மற்றும் நிதி செலவின விபரங்கள் குறித்து விவாதித்தல், **பொருள்-7:** மகளிர் திட்டம், **பொருள்-8:** புது வாழ்வு திட்டம், **பொருள்-9:**கொசுக்கள் மூலம் பரவும் டெங்குக் காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து விவாதித்தல், **பொருள்-10:**இதர பொருட்கள்

மேற்குறிப்பிட்டுள்ள அரசின் திட்டங்கள் மற்றும் ஊராட்சியின் செயல்பாடுகள் பற்றிய விபரங்களை தெரிந்து கொண்டு பயன்பெறும் வகையில் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், பொதுமக்கள், மகளிர் சுயஉதவிக் குழுக்களைச் சார்ந்தவர்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் என அனைவரும் அதிக அளவில் கலந்து கொண்டு கிராம சபைக் கூட்டத்தைச் சிறப்பிக்கக் கேட்டுக்கொள்கிறேன்.

கிராம சபைக் கூட்டம் நடத்துவது பற்றிய செய்தியினை பொதுமக்கள் அறியும் வண்ணம் துண்டு பிரசுரங்கள் வினியோகித்தல், ஒலிபெருக்கி மற்றும் டாம்டாம் மூலம் அறிவிப்பு செய்தும் கிராம சபா கூட்டத்தினை சிறப்பாக நடத்திட தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ள ஊராட்சி மன்றத் தலைவர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேற்காணும் தகவலை புதுக்கோட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**